செ.வெ.எண்:17 நாள்:07.07.2017

**கரூர் மாவட்டம், அனைவருக்கும் கல்விஇயக்கதிட்டத்தில்கீழ்மாற்றுதிறன் மாணவர்களுக்கானமருத்துவமுகாம் சார்பானஆலோசனைக் கூட்டம் – மாவட்டஆட்சியர் தகவல்**

கரூர் மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் கீழ் மாற்றுதிறன் மாணவர்களுக்கான மருத்துவமுகாம் சார்பான ஆலோசனைக் கூட்டம் 05.07.2017 அன்று மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதல்வர், அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனை, இணைஇயக்குநர் (மருத்துவபணிகள்), முதன்மைக்கல்விஅலுவலர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மற்றும் துணை இயக்குநர்(பொதுசுகாதாரம்) அவர்களோடு6–18 வயதுடையமாற்றுதிறன் மாணவர்களுக்கான மருத்துவ முகாம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்துதல் குறித்த வழிமுறைகள் மற்றும் ஆலோசனைக வழங்கினார்.கரூர் மாவட்டத்தில் 8 ஒன்றியங்களில் மருத்துவமுகாம் நடைபெற உள்ளது.

| வ. எண் | தேதி | ஒன்றியம் | மருத்துவமுகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | 17.07.17 | கரூர் | புனிததெரசாஉதவிபெறும் தொடக்கப்பள்ளி, கரூர் |
| 2 | 18.07.17 | தாந்தோணி | அரசுஉயர்நிலைப்பள்ளி, கவுண்டம்பாளையம் |
| 3 | 19.07.17 | அரவக்குறிச்சி | அரசுமேல்நிலைப்பள்ளி, அரவக்குறிச்சி |
| 4 | 20.07.17 | கிருஷ்ணராயபுரம் | அரசுமேல்நிலைப்பள்ளி, இலாலாபேட்டை |
| 5 | 21.07.17 | கடவூர் | அரசுமேல்நிலைப்பள்ளி, தரகம்பட்டி |
| 6 | 24.07.17 | க.பரமத்தி | அரசுமேல்நிலைப்பள்ளி, க.பரமத்தி |
| 7 | 25.07.17 | குளித்தலை | அரசுபெண்கள்மேல்நிலைப்பள்ளி, குளித்தலை |
| 8 | 26.07.17 | தோகைமலை | அரசுமேல்நிலைப்பள்ளி, தோகைமலை |

இம்மருத்துவமுகாம்களில்கலந்துகொள்ளும் மாணவர்களுக்குமாவட்டமாற்றுத்திறனாளிகள்நலஅலுவலகம் வாயிலாகதேசியஅடையாளஅட்டைவழங்குதல்,மருத்துவகுழுவினரால்பரிந்துரைக்கப்படும் மாணவர்களுக்குஉதவிஉபகரணங்கள் ,அறுவைசிகிச்சைசெய்தல்போன்றஉதவிகள்மாணவர்களுக்குவழங்கப்படஉள்ளது.இம்முகாம்களில் 6–18 வயதுடையமாணவர்கள்கலந்துகொண்டுபயன் அடையுமாறுமாவட்டஆட்சியர் தெரிவித்தார்,

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் கரூர்.